Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 19 ஞாயிற்றுக்கிழமை (2-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 95

## அரசியல்வாதிகளின் ஆயுதங்களை களைய தெற்கில் வீதித் தடைகள்

### வீடுகளிலும் சல்லடை போட்டுத் தேடுதல்

கொழும்பு, மார்ச் 2

தெற்கில் வீதிகளில் பொலீஸார் சோதனை நிலையங்கள் அமைத்து அரசியல்வாதிகளிடம் இருந்து ஆயுதங்களைத் தேடி வருகின்றனர்.

குறிப்பிட்ட சில பகுதிகளில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அவரது நெருங்கிய ஆதரவாளர்களின் வீடுகள் சல்லடை போட்டுத் தேடப்படுகின்றன.

கிராமம் கிராமமாக மேற்கொள்ளப்படும் இத் தேடுதல்களில் ஏராளமான ஆயுதங்கள் பொலீஸாரிடம் சிக்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நுகேகொடையில் நேற்று முன்தினம் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தேடுதலினால் வீதிப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

### முச்சந்தி முரளி



உதுதான் சொல்லுறது பாருங்கோ ஆனைக்கொரு காலம், பூனைக்கொரு காலம் எண்டு..!

## இன்று முதல் 3 நாள்களுக்கு கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 2

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று முதல் மூன்று நாள்களுக்குக் கப்பல் சேவை நடைபெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று செல்லும் கப்பலில் 500 பயணிகளும்—

நாளை செல்லும் கப்பலில் 290 பயணிகளும்—

நாளை மறுதினம் செல்லும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஊடுருவலைத் தடுக்க தமிழகத்தில் சிறப்புப் படைப் பிரிவு!

## கடலோரப் பகுதியில் 1,000 கி.மீற்றர் பாதுகாப்பை வலுப்படுத்தத் திட்டம்

புதுடில்லி, மார்ச் 2

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்குமுகமாக சிறப்புப் பாதுகாப்புப் படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அந்த மாநிலத்தின் ஆயிரம் கிலோ மீற்றருக்கும் கூடுதலான கடலோரப் பகுதியில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக, தலைமைக்காவல் ஆய்வாளர் தலைமையில் இந்தச் சிறப்புப் படை உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே பணியில் ஈடுபட்டிருக்கும் கரையோரக் காவல் படைக்கு மேலதிகமாகவே புதிய பிரிவு உண்டாக்கப்பட்டிருக்கிறது.

தமிழகக் கடற்கரைப்பகுதி பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அறுபது சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்படும் என்றும் —

சுமார் ஆயிரம் காவல் துறையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் — மாநில காவல்துறையினர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீதித்தடையில் நிறுத்தாது சென்ற மோட்டார் சைக்கிள் மீது சூடு!

கொழும்பு, மார்ச் 2

தெற்கில் சோதனை நிலையம் ஒன்றில் நிறுத்தாமல் சென்ற மோட்டார் சைக்கிள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அதில் சென்ற இருவர் காயமடைந்தனர்.

பசியால என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அதேவேளை — கடந்த புதன் இரவு அதே இடத்தில் வசித்து வந்த பிரபல வர்த்தகர் ஆர். பி. கருணாரத்தின என்பவரது வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாதவர்கள் அவரைச் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

(இ- 150- 3)

## ஜி. சீ. ஈ. பரீட்சை மீளாய்வு விண்ணப்பம்

அண்மையில் வெளியான ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும்படி இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.-

(இ–5)

## பிரதமராகும் யோகம் 3 அமைச்சர்களுக்கு!

### இந்திய சோதிடர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவுக்குப் பின்னர் பிரதமர் பதவி யாருக்கு? இது குறித்து தற்போது அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

தமது காலபலனை அறிவதற்காக பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் பகுதியில் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திப் பகுதியில் நேற்று பிற்பகல் 4.45 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சேதவிவரம் தெரியவரவில்லை.

அதே நேரம் — நேற்று முன்தினம் மாலை கோண்டாவில் உப்புமடம் பிள்ளையார் கோயில் பகுதியில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலையடுத்து படையினர் சரமாரியாகச் சுட்டனர்.

அதன் பின் அப்பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

(இ-3)

## உள்ளூராட்சித் தேர்தலில் ரெலோவுக்கு கூட்டணி ஆதரவு

கொழும்பு, மார்ச் 2

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ரெலோ குழுவை ஆதரிப்பது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், ரெலோ அமைப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த 26 ஆம் திகதி நடந்த சந்திப்பையடுத்தே கூட்டணி இந்த முடிவை எடுத்தது.

(8ஆம் பக்கம் பார்க்க))

## ஜெயின் கமிஷன் முன் ஆஜராவதைத் தவிர்ப்பதற்காக 'றோ' அதிகாரிகளால் பெருமாள் மாலைதீவு கூட்டிச்செல்லப்பட்டாரா?

கொழும்பு, மார்ச் 2

ஜெயின்கமிஷன் முன் ஆஜராவதைத் தவிர்ப்பதற்காக வடக்கு — கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ராஜஸ்தானில் இருந்து ''றோ'' அதிகாரிகளால் மாலைதீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டாரா?

இது குறித்து கொழும்பு தமிழ் வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெயின் கமிஷன் முன்பாக வரதராஜப்பெருமாள் ஆஜராகி சாட்சியம் அளிக்கவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் வழக்கறிஞர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி வரதராஜப் பெருமாளை ஆஜராகி ... அளிக்குமாறு உத்தரவிட்டி...

[8 ஆம் பக்கம் பார்க்க]

### குண்டுதுளைக்காத உடை எடுத்துவர

## புஞ்சிநிலமேக்கு உதவிய பிரதி அமைச்சர் யார்?

கொழும்பு, மார்ச் 2

இரத்தினபுரி மாவட்ட ஐ. தே. கட்சி எம்.பி. சுஸந்த புஞ்சி நிலமே வெளிநாட்டிலிருந்து குண்டு துளைக்காத உடை ஒன்றை எடுத்துவருவதற்கு பிரதி அமைச்சர் ஒருவர் உதவினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாலந்தா எல்லா வெல துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவத்தின் போது புஞ்சி நிலமே அந்த உடையையே அணிந்திருந்தாராம்.

மேலும் புஞ்சிநிலமே அந்த உடையை வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்தபோது

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலைக்கழக B.Sc. வெளிவாரி மாணவர்களைப் பதிவுசெய்தல் 97/98

A/L கணிதத்துறையில் 3 பாடங்களில் சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விரிவுரைகள் **8 - 3 - 97** இல் ஆரம்பமாகின்றன.

## A/L 97 வணிகப் புள்ளிவிவரவியல் மீட்டல் வகுப்புகள்

மேற்படி மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புகள் **7 - 3 - 97** இல் ஆரம்பமாகின்றன.

A/L 95, 96 இல் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான வணிகப் புள்ளிவிவரவியல் 6 மாதகால துரித நாளாந்த வகுப்புகள் மூலம் பாடத்திட்டம் முற்றாக முடித்துக் கொடுக்கப்படும்.

அச்சடித்த பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.

விவரங்களுக்கு:

**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

★ விரிவுரைகள் எமது வழமையான புள்ளிவிவரவியல் விரிவுரையாளரால் வழங்கப்படும்.

(சி/227)


# கண்ணீர் அஞ்சலி

## திரு. அகஸ்ரின் ஸ்ரான்லி

**(கிளை முகாமையாளர் - யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்)**

எமது சக ஊழியரான அன்னாரின் மறைவையொட்டித் துயருறும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,**
**யாழ். பட்டணக்கிளை.** (45592)

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பொடி இராசலிங்கம்
## இராசலிங்கம் பத்மாவதி
## இராசலிங்கம் பவதாரணி
## இராசலிங்கம் தினேசனா

**(மாணவிகள் திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.)**

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் 1/1 பலாலி வீதியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய சின்னப்பொடி இராசலிங்கமும் அவரின் குடும்பத்தவர்களான மனைவி இராசலிங்கம் பத்மாவதி, பிள்ளைகள் செல்விகள் இ. பவதாரணி, இ. தினேசனா (மாணவிகள், திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்) ஆகியோரும் 19 - 02 - 97 அன்று அகாலமரணமானார்கள்.

இராசலிங்கம் அவர்கள் காலஞ்சென்ற சின்னப்பொடி — சின்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் அன்னம் (கனடா), ஆகியோரின் மருமகனும் சறோஜினி, சிவானந்தராசா (லண்டன்), சிவதாஸ்(கனடா), கருணதாஸ்(கனடா), பேபி, மாணிக்கம் (நாகபடுவான்) ஆகியோரின் மைத்துனரும் அனுஷாவின் (நாகபடுவான்) தகப்பனாரும் பரமேஸ்வரி (கனடா) ராசலக்சுமி, சத்தியநாதன் (சீலன்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இந்நால்வரின் இறுதிக்கிரியைகளும் 19-02-97 அன்று நாகபடுவானில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி. சத்தியநாதன் (சீலன்)**
(சகோதரன்)

243, காரைநகர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (45593)

## திருமதி இராஜ்குமார் மகேஸ்வரி

விடத்தல்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராஜ்குமார் மகேஸ்வரி 1997-02-16 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் நல்லூரைச் சேர்ந்த விமலன் இராஜ்குமாரின் (இளைப்பாறிய வேலை மேற்பார்வையாளர்—நீர்ப்பாசனத் திணைக்களம்) அன்பு மனைவியும், திரு திருமதி A. T. ஜெயசிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ் சென்றவர்களான திரு திருமதி இராமுவேலுப்பிள்ளையின் (விடத்தல்பளை) அன்பு மகளும், செல்வி பேபிஜர்மிளா, குமணன், துஷியந்தன், நமணன், தரணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1997 - 02 - 17 அன்று விடத்தல்பளை, சம்பாவளி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
**A.T. ஜெயசிங்கம்**
(மாமன்)

8, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை. (45555)

# மீளாய்வு செய்யப்பட்ட சம்பளத்தை வழங்கக் கோரி அதிபர்கள் மறியல்

கொழும்பு, மார்ச் 2

தமக்குத் தரவேண்டிய சம்பள அதிகரிப்பைத் தர வேண்டும் என்று கல்வி அமைச்சைக் கோரி அகில இலங்கை அதிபர்கள் சேவா சங்கம் நேற்று முன் தினம் நண்பகல் கோட்டை ரயில் நிலையம் முன்பாக சாத்வீக மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியது.

இப்போராட்டத்தில் தமிழ் முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான அதிபர்கள் ஈடுபட்டனர் என்றும் —

நண்பகல் 12 மணியிலிருந்து ஒரு மணி வரை இப்போராட்டம் நீடித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் தலைவர் டி. களு ஆராச்சி அங்கு பேசுகையில் ''ஆசிரிய சேவை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடம் ஐந்து மாதங்கள் பூர்த்தியாகியும் இன்றுவரை அதிபர்கள் சேவை உருவாக்கப்படவில்லை. இதனால் ஆசிரியர்களை விட அதிபர்கள் குறைந்த சம்பளத்தையே பெறுகின்றனர்'' என்றார்.

''மனித உரிமையைப் பாதுகாக்க நீதிமன்றம் வரை செல்லத் தயார்.'' ''பி.ஸி.பெரேராவின் அறிக்கையைக் கிழித்தெறிக'' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளுடன் அதிபர்கள் இப்போராட்டத்தில் பங்குபற்றினர்.

ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள அதிகரிப்பு பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டமையும் —

இவர்களின் சம்பளம் மீளாய்வு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டமையும் தெரிந்தவையே.

(இ-3-5)

## தையற் கலை நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 1

கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கத்தின் ஆதரவுடன் செல்வி ஆ. பவானி எழுதிய ''மும் முக தையற் கலை'' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் நடைபெறும். (ஐ-4)

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற லொறி, சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

சைக்கிளில் சென்றவரான திருநெல்வேலியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் தனபாலசிங்கம் (வயது 52) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## புங்குடுதீவில் கலந்துரையாடல்

கொழும்புத்துறை, மார்ச் 2

புங்குடுதீவு கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு புங்குடுதீவு ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கு அருகில் நடைபெறவுள்ளது.

வேலணை உதவி அரசாங்க அதிபர், வேலணை பிரதேச சபைச் செயலாளர், கிராம சேவகர்கள் உட்பட பலர் இக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர். (ஐ-30)

## உடற்பயிற்சி போட்டி ஒத்திவைப்பு

வலிகாமம் தெற்கு, மார்ச் 2

எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெற இருந்த உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 12 ஆம் திகதி ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் உடற்பயிற்சிப் போட்டிகள் நடைபெறும். (ஐ-152)

## விமானப்படை சிப்பாய் தற்கொலை

கொழும்பு, மார்ச் 2

காலிப் பகுதியில் உள்ள கொக்கலை விமானப்படை முகாமைச் சேர்ந்த விஜயபால (வயது 24) என்ற விமானப்படைச் சிப்பாய் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார். (ஐ)


# யூனிவேர்சல்

**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**97 A/L**
**PAPERCLASS**
பொது இரசாயனம்
**திரு. சிவத்திரன்**
B. Sc.
MON — FRI 7-00 A m
[illegible]
(45594)


# குப்பைவாரியில் சிக்கிய மிதிவெடி; மல்லாகத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வளவு துப்புரவாக்கிக் கொண்டிருந்த வேளை குப்பை வாரிக்குள் சிக்குண்டு மிதிவெடி வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.

மல்லாகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கூலிக்கு வேலை செய்யச் சென்றவர்களான அளவெட்டியைச் சேர்ந்த மாரிமுத்து இந்திரன் (வயது 48), நாகலிங்கம் தர்மசீலன்(வயது 24) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

# மூடப்படும் நிலையில் முல்லை. ஆஸ்பத்திரி

## மருந்துக் கையிருப்பு முடிகிறது

கொழும்பு, மார்ச் 2

கொழும்பிலிருந்து மருந்து வகைகள் அனுப்பப்படாது போனால் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலை வார்ட்டுகளை விரைவில் மூடப்படவேண்டிய நிலைமை ஏற்படலாமென அங்கு கடமையாற்றும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகின்ற நோயாளர்களுக்கு வழங்க மருந்துகள் இல்லை என்றும் மருந்துச்சிட்டைகள் மட்டுமே வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வார்ட்டில் தங்கியுள்ள நோயாளர்களுக்கான மருந்துகளின் கையிருப்பும் முடிவுறும் தறுவாயில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-5)

# ஐ. ஐ. தே. மு. தெகிவளையில் சுயேச்சைக் குழுவாகப் போட்டி?

கொழும்பு, மார்ச். 2

தெகிவளை நகர சபைத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உள்ளூராட்சிதேர்தலில் போட்டியிடாது நடுநிலைமை வகிப்பதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

ஆனால் தெகிவளை நகர சபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக்குழு ஒன்று தாம் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி (லலித்பிரிவு) சார்பாகப் போட்டியிடுவதாகக் கூறிப்பிரசாரம்செய்து வருகின்றது.

இது குறித்து கருத்துவெளியிட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்தினா, தெகிவளையில் போட்டியிடும் சுயேச்சைச் குழு ஜ. ஐ. தே. மு. (லலித்பிரிவு) அல்ல அவர்கள் போட்டியிடுவது தெரியவந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்றார்.

(இ-3-150)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். வண்ணை குளங்கரை மருதடி
ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான தலைவர்

## அமரர் கந்தையா இராசரத்தினம்

அவர்கள் 5- 2- 1997 அன்று ஒட்டிசுட்டானில் இறைவனடி சேர்ந்ததையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீகாமாட்சித்தாயைப் பிரார்த்திக்கின்றோம்.

**- தர்மகர்த்தா சபையினர்**

**நாச்சிமார்கோயில்,**
**யாழ்ப்பாணம்.** (9342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பூமியதிர்ச்சிக்கு ஈரானில் 200 பேர் பலி!

## 40 கிராமங்கள் தரை மட்டம்!!

தெஹிரான், மார்ச் 2

ஈரானின் வடமேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் இருநூறுக்கு மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டதாக தெஹிரானில் இருந்து வெளியான தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாற்பது கிராமங்கள் முற்றாக அழிந்து போய்விட்டன என்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்திருப்பதாகவும் அரசாங்கத் தொலைக்காட்சி அறிவித்தது.

இந்த நிலநடுக்கத்தில் பலியானோரின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் மேலதிக விவரங்கள் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை.

இதேவேளை தென்மேற்குப் பாகிஸ்தானில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் பலியானவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது.

ஆயிரக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகியுள்ளன.

அவசர மீட்புப்பணிகளுக்காக இராணுவம் அங்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

(ஐ)

# அணுக் கழிவுகளை ஜேர்மனிக்குள் சேமிப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்!

## ரயிலை வழி மறித்துத் தடுக்கத் திட்டம்

பொன், மார்ச் 2

கதிரியக்க அணுக்கழிவுகள் அப்புறப்படுத்தப்படுவதற்காக வீதி வழியே எடுத்துச் செல்லப்படுவதை எதிர்த்து ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருக்கிறது.

வட ஜேர்மனியில் ஹம்பேர்க் நகருக்கு அருகே இந்த கழிவுப் பொருள்களை கிடங்கு ஒன்றில் சேமித்து வைப்பதற்காக ரயில் மூலம் அவை எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இதனைத் தாங்கள் தடுக்கப்போவதாக அணுசக்தி எதிர்ப்பு குழுக்களின் கூட்டணி ஒன்று எச்சரித்திருக்கிறது.

முன்னதாக இந்த அணுக்கழிவுகள் லொறிகள் மூலம் ரயில் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை பொலீஸார் பலவந்தமாக அப்புறப்படுத்தினர்.

ஹெலிக்கொப்டர்கள் மூலம் வீதிகளில் இறக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பொலீஸார் வீதிகளில் முகாமிட்டு தடைகளை ஏற்படுத்தியிருந்த அணுசக்தி எதிர்ப்பாளர்களை பலவந்தமாக தூக்கிச் சென்று அப்புறப்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அங்கு மிகப் பெரிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அணுக் கழிவுகளை குறிப்பிட்ட இடத்துக்கு எடுத்துச் செல்லவுள்ள ரயிலை சுமார் 10 ஆயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் இவ்வாரம் வழிமறிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளில் இருந்து வரும் இந்த அணுக் கழிவுகளை நிலமட்டத்தின் கீழ் இடைக்காலத்துக்கு சேமிப்பதற்காக ஜேர்மனி அவற்றைப் பொறுப்பேற்றுள்ளது.

இது ஒப்பந்தம் ஒன்றின் படியே மேற்கொள்ளப்படுவதாக ஜேர்மனியின் சுற்றாடல் துறை அமைச்சர் அஞ்சலா மேர்கர் தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பாளர்கள் கூட்டாக வெளிப்படுத்தும் கண்டனங்கள் எதுவும் அரசின் இந்தக் கொள்கையை மாற்றிவிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

திரிபுரா மாநிலத்தில்

# பங்களாதேஷ் எல்லையோரம் மக்கள் நடமாடுவதற்குத் தடை

புதுடில்லி, மார்ச். 2

மேற்கு திரிபுராவில் இந்திய பங்களாதேஷ் எல்லையோரப் பகுதிகளில் மக்கள் நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த ஒரு மாத காலத்துக்கு இத்தடை உத்தரவு அமுலில் இருக்கும் என்று திரிபுரா மாநில அரசு அறிவித்துள்ளது.

திரிபுராவில் இடம் பெற்று வரும் வன்செயல் சம்பவங்களை அடுத்து இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரிபுராவில் உள்ள பழங்குடி மக்களுக்கும் பங்களாதேஷில் இருந்து வந்து குடியேறிய மக்களுக்கும் இடையேயான இனப்பூசல் தீவிரமடைந்திருக்கிறது.

திரிபுராவின் பூர்வீகக் குடிகளுக்கு ஆதரவான தீவிரவாதிகள் பங்களாதேஷில் இருந்து வந்து குடியேறிய மக்களின் கிராமங்கள் மீது அண்மையில் தாக்குதல்களை நடத்தியிருப்பது தெரிந்ததே.

(ஐ)

படங்களை வெளியிட வேண்டாம் என

# ஜெயலலிதா தாக்கல் செய்த மனு; நீதிமன்றம் தள்ளுபடி செய்தது

சென்னை, மார்ச் 2

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தனது இல்லத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது எடுக்கப்பட்ட படங்களை பத்திரிகைத் துறையினரோ தகவல் சாதனங்களோ பிரசுரிப்பதையும் வெளியிடுவதையும் தடுக்கவேண்டும் எனக் கோரித் தாக்கல் செய்திருந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

பொது ஆவணங்களில் உள்ள விடயங்களைப்பிரசுரிப்பதையும் வெளியிடுவதையும் தடைசெய்யும் அதிகாரம் அரசுக்கோ அரசு அதிகாரிகளுக்கோஎந்தச்சட்டத்திலும் இல்லை என இந்த வழக்கை விசாரித்த முதன்மை அமர்வு நீதிபதி ஏ. இராமமூர்த்தி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் ஜெயலலிதாவின் இல்லத்தை புலனாய்வுத் துறை அதிகாரிகள் சோதனையிட்டபோது கோடிக்கணக்கான ரூபா மதிப்புள்ள தங்க, வைர நகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த நகைகளின் படங்களை பத்திரிகைகள் பிரசுரித்தன. சிலதனியார் தொலைக்காட்சி சேவைகளிலும் காட்டப்பட்டன. இவற்றைத் தடைசெய்யும் நோக்கிலேயே ஜெயலலிதா வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

(ஐ-10)

**உலக அரங்கில்**

# கைதான மற்றும் விடுவிக்கப்பட்ட மேலும் 44 பேரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு கொழும்பு மகஸீன் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோர் மற்றும் விடுவிக்கப்பட்டோர் தொடர்பான 44 பேரின் விவரங்கள் யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு கிடைத்துள்ளன.

அவர்களின் விவரங்கள் வருமாறு:-

★ ரத்தினம் நகுலன் — சச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ பிள்ளையார் அந்தோனி — 9, ராசாவின் தோட்டம், குருநகர்.

★ கந்தையா சூரியகுமார் — ராமநாதபுரம் யூனிட், கிளிநொச்சி.

★ நவரட்ணம் முகுந்தன் — கைதடி மேற்கு, கைதடி.

★ சின்னத்தம்பி திலகேஸ்வரன் — மந்துவில், கொடிகாமம்.

★ தங்கராசா செல்வராசா — மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

★ பொன்னையா ரவிச்சந்திரன் — கிளிநொச்சி.

★ நடராசா யோசிகரன் — மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ நடராசா யோசிதரன் — மறியல் ஆஸ்பத்திரி (12-02-97)

★ இராசையா கணேசலிங்கம் — ஆனந்த வீதி, மானிப்பாய் கிழக்கு.

★ அழகேந்திரராஜா பகீரதன் — நாவற்குழி வடக்கு, கைதடி.

★ கிருஷ்ணன் சந்திரகுமார் — அல்வாய் தெற்கு, அல்வாய்.

★ இராசரட்ணம் இரவீந்திராசா — ஊரெழு, சுன்னாகம். (விடுவிக்கப்பட்டார்)

★ மேரிஜோசப் அமலதாஸ் — கேரதீவு வீதி, கைதடி.

★ சிங்கராஜா விஜயதாஸ் — கைதடி கிழக்கு, கைதடி. (விடுவிக்கப்பட்டார்)

★ சிவஞானம் சசிகரன் — நாவற்குழி, கைதடி.

★ தனபாலன் சுப்பிரமணியம் — வசாவிளான், கோப்பாய், மத்தி.

★ ராசநாயகம் கனகரட்னம் — நாவற்குழி, கைதடி. (விடுவிக்கப்பட்டார்)

★ நல்லதம்பி ரவிச்சந்திரன் — நாவற்குழி கிழக்கு. (விடுவிக்கப்பட்டார்)

நடராஜா லோகசிங்கம் — நாவற்குழி தெற்கு, கைதடி.

★ குலரட்னம் சற்குணம்— நாவற்குழி தெற்கு, கைதடி.

★ சின்னத்துரை சிவராசா — நுணாவில், சாவகச்சேரி. (விடுவிக்கப்பட்டார்)

★ சாமுவேல் ஐயாத்துரை — புதிய சந்தை, கோப்பாய் (விடுவிக்கப்பட்டார்)

★ இராசதுரை ஜெயப்பிரகாசம் — பூதர்மடம் கோப்பாய், வடக்கு (விடுவிக்கப்பட்டார்)

★ பஞ்சலிங்கம் நிரஞ்சன் — உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

★ அந்தோனிப்பிள்ளை டெசிதரன் — குட்டியா தோட்டம், குருநகர் வீதி.

★ வெங்கடசலபதி செல்வம்— பாரதிபுரம் விஸ்வமடு.

★ முத்துக்குமார் சந்திரகுமார் — தேயம்பை, வல்வெட்டித்துறை.

★ தங்கராசா வசந்தநாதன் (குட்டித்தம்பி) — மைலணி வடக்கு, சுன்னாகம்.

★ புலேந்திரன் ஜெகநாதன் — தள்ளாடி கிழக்கு, வடமராட்சி.

★ இலட்சுமிகாந்தன் மதியழகன் — கிளிவெட்டி, மூதூர். (விடுவிக்கப்பட்டார்)

★ தாமோதரம்பிள்ளை ஜெயரட்ணம் — தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

சோமசுந்தரம் பிரபாகரன் — கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (விடுவிக்கப்பட்டார்)

சோதிலிங்கம் சுரேஸ்குமார் — பாரதிபுரம், திருநெல்வேலி. (விடுவிக்கப்பட்டார்)

★ குணரட்ணராஜா செல்வேந்திரன் — உரும்பிராய் மேற்கு.

★ சின்னத்துரை சிவராசா- சரசாலை, வரணி (விடுவிக்கப்பட்டார்)

★ பரமசாமி சிவபாலன் — நாமல்கோட்டை, கோப்பாய் வடக்கு.

★ பொன்னுச்சாமி சிவநாதன் — 75- 6, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (விடுவிக்கப்பட்டார்)

★ அர்ச்சுதன் பிள்ளை பாலச்சந்திரன் — இந்துக்கல்லூரி வீதி, நீராவியடி.

★ நாகராசா சதீஸ்ரூபன் - அம்மன் கோவிலடி, தச்சன்தோப்பு. (விடுவிக்கப்பட்டார்)

★ சிவமூர்த்தி சிவலிங்கம் — தினேஸ் பேக்கரி, மானிப்பாய். (விடுவிக்கப்பட்டார்)

★ இராசமனோகரன் தயாபரன் — கோண்டாவில் புகையிரத நிலையம். (விடுவிக்கப்பட்டார்)

★ வேலுப்பிள்ளை பிரதீபன் — 116-1, மீசாலை வடக்கு, மீசாலை. (விடுவிக்கப்பட்டார்)

★ பத்மநாதன் சிவநாதன் — 171, அரசடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

# விவேகானந்தர் நூற்றாண்டு நிகழ்வு

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவை ஒட்டி நடத்தி வரும் நிகழ்வுகளில் ஒன்று நாளை திங்கட்கிழமை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி வ.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

'சுவாமி விவேகானந்தரின் அபிலாசை யாது?' என்ற தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா அங்கு உரையாற்றுவார்.

(ஐ-4)

# மாணவர் சிறந்த மனிதராக...

இன்று ஏடுதூக்கிச் செல்லும் மாணவன் நாளை நாடு காக்கும் தலைவன். எதிர்காலமே மாணவர்களின் கையில் தான் உள்ளது மாணவர்கள் வளரும் பச்சிளங் குருத்துப் போன்றவர்கள். வளர்ந்து நடுவதற்கு காத்திருக்கும் நாற்றங்கால் நாற்றுக்கள் அவர்கள்.

மகாபாரதத்தில் துரோணரிடம் கௌரவர்களும், பாண்டவர்களும் வில்வித்தை கற்றார்கள். அதில் அர்ச்சுனன் மாத்திரமே வில்வித்தையில் சிறந்து விளங்கி அழியாப்புகழ் பெற்றான். இதற்குக் காரணம் குருவார்த்தைகளை மதித்து கற்றலின் கவனஞ் செலுத்தி குரு ஆசி பெற்றதால் இவ்வாறு புகழ் பெற்றுள்ளான்.

மகாத்மா காந்தியடிகள் பெற்றோருக்கு கீழ்ப்படிதல், வாய்மை, நேரந்தவறாமை, எளிமை, ஒழுக்கம் தவறாமை போன்ற நல்ல பண்புகளில் பயிற்சிபெற்று, சொல்வது போலவே நடந்து காட்டி மகாத்மா ஆனார்கள்.

மாணவர்கள் சிறுவர்களாயிருக்கும் போதே பணிவு, கீழ்ப்படிதல், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வாய்மை, பிறர் நலம் பேணுதல் போன்ற உயர்ந்த பண்புகளில் பயிற்சிபெற்று நடைமுறையில் பின்பற்றினால் சிறந்த மனிதனாகலாம்.

மாணவர்கள் சிறுவயதில் தெளிவறக் கற்க வேண்டும். அறிவு உரம் ஏற்றவேண்டும், மரபுநிலை காக்க வேண்டும்.

பள்ளிக் கூரைக்குள் நுழையாத சிறுவர்கள் பதர்களாகி விடுவார்கள். ஆகவே மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும். மாதா, பிதா, குரு தெய்வம் இவர்களை நாள் தோறும் போற்றி மதித்து நல்வழி நடத்தல் மாணவர்கள் கடமையாகும்.

உலகத்தில் எத்தனை பேர் பிறக்கிறார்கள்; இறக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர் மாத்திரமே வரலாறு கண்டு அழியாப்புகழ் பெற்றுள்ளார்கள். இதற்குக் காரணம் யாது? குரு வார்த்தைகளை மதித்து, குரு வழிசென்று இம்மையிலும் மறுமையிலும் ஒளிமயமான வாழ்வு பெறவேண்டும் என்று மனதில் கொண்டு —

''உள்ளத்தால் பொய்யாது வாழ்ந்து உலக உத்தமர் காந்திபோல் உயர்வோம்''

தொகுப்பு: க. கனகராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (Condition) Ey 7836 சோமசெற், 7ஸ்ரீ 8894 ஒக்ஸ்போட் மோட்டார் கார்கள் விற்பனைக்கு உண்டு, தொடர்பு: ராஜன் சயிக்கிள் வேர்க்ஸ், பருத்தித்துறை. (C/204)

வணிகப் புள்ளி விவரவியல் வினா விடைத் தொகுப்பு. விலை ரூபா 35/- Bond, C. C. A. கல்வி நிலையம் யாழ்ப்பாணம் மது புத்தகசாலை, கொக்குவில். (45560)

பிறவுண் கலர் பொமிறேனியன் நாய்க் குட்டிகளும், ஐந்து மாத அல்சேசன் பெண்நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். அல்பிறெட், இல. 25, பாக்றோட் றெக்கிளமேசன், யாழ்ப்பாணம். (45565)

அல்சேஷன் ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. கரன் 639/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (45564)

### தவறிவிட்டது

பெண்கள் அணியும் கைச்சங்கிலி ஒன்று (23-02-97) ஞாயிற்றுக்கிழமை சுதுமலைக்கும் நாச்சிமார்கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முகாமையாளர், 'கல்கிசன்ஸ்' 147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தயாளகேசரி. (9317)

குட்டப்பன் சந்திரபோஸ் என்பவருடைய அடையாள அட்டை இல. 0902017740 பெரியதம்பிரான் வீதிக்கும், கொக்குவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பராசக்தி மில், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி என்னும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். (45585)

### வகுப்புகள்

98 ஆம் ஆண்டுக்கான பிரத்தியேக வகுப்பு. ஆரம்பம்: 2 - 3 - 97 க. இராஜேந்திரகுமார், சேச் அருகாமை, கொக்குவில் கிழக்கு. (45559)

### அன்பளிப்பு

மஹாசிவராத்திரி புத்தகம், நடராஜர் படம், கலண்டர். மில்க்வைற் நீலசோப்/ மெடிக்கேற்றற்/ பார்சோப்/ சலவைத்தூள் 5 மேலுறைகளுக்கு கொடுக்கப்படும். ''மில்க்வைற்'' (சி/124)

## புதிய அதிபர் நியமனம்

அச்சுவேலி, மார்ச் 2

இடைக்காடு மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராகத் திரு. எஸ். சித்திரவடிவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இடைக்காடு மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய திருமதி வி. தெய்வேந்திரன் கடந்த வருடம் காலமாகிய பின்னர் அதிபர் பதவி நிரப்பப்படாமல் இருந்து வந்தது. (ஐ-11)

## தேவை

அனுபவமுள்ள மெஷின் மைன்டர், வேலை பழக ஆர்வமுள்ள இளைஞர் தேவை. நேரில் சமுகந்தரவும்.

**தேவி அச்சகம்,**
**114/ 19, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(9340)

## யா / இடைக்காடு மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

இடைக்காடு மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் 9-03-1997 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறும். அத்தருணம் பழைய மாணவர்கள் யாபேரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நன்றி.

(45572) செயலாளர்

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், கோண்டாவில்.

பிரத்தியேக வகுப்புகள்

**கணக்கியல்**

**A/L 98, 99**

ஆசிரியர்:- திரு. பாலவாசன்

**ஆரம்பம்:- 06-03-1997**

வியாழன் 3-00 P. M.

(45584)

## மீண்டும் வந்து விட்டது

**மக்கள் நன்மதிப்பைப் பெற்ற**

**புறாட் ரல்கம் பவுடர் (BRUD)**

மற்றும்

**றெயினி ரல்கம் பவுடர் (RAINE)**

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு விசேஷ கழிவு உண்டு.

தரமான போட்டோப் பிரதிகளுக்கும் "கோல்டன் விங்"

தொடர்பு கொள்ளவும்;

## கோல்டன் விங்

**154, நவீன சந்தை**
**மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

(45575)

## 22 ஆம் ஆண்டு நினைவலைகள்



### மரியதாஸ் றொசாறியோ பாரதிதாஸ்

| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 10 — 08 — 72 | 02 — 03 — 75 |

பாரதி என உனக்குப் பாங்குடன் பெயர் சூட்டி
பாசமுடன் வளர்த்தோம் சீராட்டிப் பாராட்டி
ஆரது கண்பட்டோ அழகுடல் நோய் தொட்டு
சீரது நாம் இழக்கச் சிறகடித்து நீ பறந்தாய்
பேரது மறையாமல் பெருமையுடன் உன் நினைவாய்
''பாரதி மருந்தகம்'' பலர் பிணிகள் தீர்த்தென்றும்
பார் போற்றும் பணிசிறக்க பரமனை வேண்டிடுவாய்.


உன் நினைவில் வாழும்:

அப்பா, அம்மா,
அண்ணாமார்: ஆனந்தராஜா, ரவீந்திரராஜா, மோகனதாஸ்,
தம்பிமார்: ஜோய், றோய்,
தொட்டம்மா திருமதி ஜேம்ஸ்.

டாக்டர் அ. மரியதாஸ்
பாரதி ஆங்கில வைத்தியசாலை,
நவாலி தெற்கு, மானிப்பாய். (9328)

## நினைவஞ்சலி

### 16 ஆம் மாதம்




### திருமதி இரத்தினம் திரிபுரியம்மா

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 1936 - 10 - 14 | 1995 - 10 - 22 |

பாசப் பிணைப்பால் எமை வளர்த்து
நேசத் துடிப்பால் உயிர் காத்து
வல்லதோர் பெண்மை யெனும்
வடிவினைத் தாங்கி எங்கள்
இல்லமோர் கோயிலாக்கி
இருந்தெமை ஆட்சி செய்தீர்!
ஈரெட்டு மாதங்கள் மறைந்தாலும்
அகலுமோ உங்கள் பாசம்?
எங்களாசையை நிறைவேற்ற
எம் நெஞ்சக் கனவினின்று நீறாகிப் போனதம்மா!

தகவல்: சி. இரத்தினம் (பன்னாலை)
மா. பத்மநாதன் (சகோதரர், மாமா)
கைதடி தெற்கு, கைதடி.

### 6 ஆம் மாதம்



### செல்வன் இரத்தினம் ஜெயன்

(யாழ். பல்கலைக்கழகம்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 1972 - 10 - 24 | 1996 - 09 - 06 |

அறுதிங்கள் சென்றதையா ஆறிடுமோ எங்கள் மனம்
அவனியிலே உன்பிரிவால் வாடுகிறோம் என்றென்றும்
பூவாக மலர்ந்தாய், பல்கலை சென்றாய்,
பட்டம் பெறுவாய் என்றிருக்க பாதியிலே நீ உதிர்ந்தாய்
தம்பி! ஜெயனே மறந்திடுமா எம் நெஞ்சம்
நீறாகிப் போனதடா உன்னுடலும் அன்று
ஆறாகிப் பாயுதடா கண்ணீரே இன்றும்
என்ன சொல்ல நினைத்திருந்தாய்! ஏங்குகிறோம்!
எண்ணி எண்ணி வாடுகிறோம்!
ஏக்கம் தீர வாழ்வினிலே இனியேது நிழல்...?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
**குடும்பத்தினர், உற்றார், நண்பர்கள்.**

(45553)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் அரசுக்கு அமோக வாக்குகளை குவிக்கப்போகும் 'ஒப்பரேஷன் எல்லாவெல'

## அனுதாப அலை மட்டுமல்ல; அதிர்ஷ்டக் காற்றும் ஜனாதிபதி பக்கமே அடிக்கிறது

யானை தன் தலையில் தானே மண் அள்ளிப்போட்டுக்கொண்ட மாதிரித்தான் ஐ. தே. கட்சியின் நிலைமையும் மாறிவிட்டது.

இரத்தினபுரி மாவட்ட பொ. ம. முன்னணி எம். பி. நாலந்த எல்லாவெல படுகொலையானது பொது மக்கள் முன்னணியை விட ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தான் பாரிய இழப்பு.

தமது இளம் எம். பியை இழந்தது பொதுமக்கள் முன்னணிக்கும் மாபெரும் சோகம்தான். செய்தியைக் கேட்டதும் ஜனாதிபதி சந்திரிகா வாய்பொத்தி விம்மியதும் பாசாங்கு அல்லத் தான்.

ஆளும் அணிக்குள் தீவிரப் போக்கான இளம் எம். பிகளைக்கொண்டஒரு கோஷ்டி இருக்கிறது. அதற்கு 'மெல் பெரி குறூப்' என்று பெயர்.

### 'மெல் பெரி குறூப்'

நாலந்த எல்லாவெல மெல்பெரி குறூப்பை சேர்ந்தவர்தான். இளம் எம். பிகள் வாய்விட்டே அழுதனர். அதுவும் உண்மைதான்.

ஆயினும், பொதுமக்கள் முன்னணி தன் இளம் எம். பியின் பாரிய இழப்பை உள்ளூராட்சித் தேர்தலுக்கான அரசியல் முதலீடாகவும் மாற்றிக் கொண்டது தான் மகாமகா புத்திசாலித்தனம்.

நாலந்த எல்லாவெல பலியானவுடன் அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் அனைத்தும் பொதுமக்கள் முன்னணியின் பிரசார சாதனங்களாகவே மாறியிருந்தன.

ரூபவாகினியை திறந்தால் நாலந்த எல்லாவெல, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவையைக் கேட்டால் நாலந்த எல்லாவெல.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில்தான் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசநாயக்கா கொல்லப்பட்டார். அவர் ஒரு முன்னாள் அமைச்சர். எதிர்க்கட்சித் தலைவர். அப்படியிருந்தும் காமினியின் மரணச் சடங்குகள் அரச வெகுஜன தொடர்பு சாதனங்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா மரணமானபோது கூட பெரியளவு முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லை.

இத்தனைக்கும் நாலந்த எல்லாவெல ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டும் தான். எனினும் நாட்டின் அதி உயர் பொறுப்பில் இருந்த தலைவர் ஒருவர் மரணமானால் கொடுக்கப்படுவதற்கு ஈடான முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

ஒருவேளை உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் இப்படியொரு சம்பவம் நடைபெற்றிருந்தால் இந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்குமா என்பது சந்தேகம்தான்.

உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் இப்படி ஒரு திருப்பம் வரும் என்பதை பொது மக்கள் முன்னணியோ சரி, ஐ. தே. கட்சியோ எதிர் பார்த்திருக்கவில்லை.

திருப்பம் ஏற்பட்டதும் முதலில் அதிர்ச்சியடைந்த போதும் பின்னர், சுதாகரித்துக்கொண்டு சுறு சுறுப்பாகி விட்டது பொதுமக்கள் முன்னணி:

ஐ. தே. கட்சியும் அதன் தலைவர் ரணிலும்தான் ஒரேயடியாக ஆடிப்போனார்கள்.

இரத்தினபுரியில் நடந்தது என்னவென்று விளக்கம் கொடுக்கக்கூட ஐ. தே. கட்சித் தலைமையால் முடியவில்லை என்பதுதான் சோகம்.

### தர்மசங்கட நிலையில் ஐ. தே. க.

ஐ. தே. கட்சி சொல்வது உண்மையாக இருந்தால் கூட பொய்யாகத் தெரியும். கொலைக் கலாசாரத்தை நியாயப்படுத்துவது போலத் தான் இருக்கும் என்பது தான் அக் கட்சிக்குரிய தர்ம சங்கடமான நிலை.

ஒரு தடவை திருட்டுக் குற்றத்தில் மாட்டியவன் தொடர்ந்து திருடுகிறானோ இல்லையோ, அவன் மீது திருட்டுக் குற்றம் சுமத்துவது சுலபம். எல்லோரும் நம்பி விடுவார்கள்.

கடந்த 17 வருடகால ஐ. தே. கட்சி ஆட்சிக் காலத்தில் அரசியல் படுகொலைகள் திட்டமிட்டு நடத்தப் பட்டதாக குற்றஞ் சாட்டப் பட்டு வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்போடு, விஜயகுமாரதுங்க கொலை தொடர்பான ஜனாதிபதிக் கமிஷன் அறிக்கையையும் வெளியிட்டு பிரசாரம் செய்தது, அரசாங்கம்.

''ஐ.தே. கட்சி மனித உரிமைகளுக்கு மாறான கட்சி; கொலை யுகக்கட்சி'' என்று மக்களுக்கு நினைவூட்டுவது தான் அரசாங்கத்தின் பிரதான இலக்கு.

17வருடகால ஆட்சிக்காலச் சம்பவங்களை மக்கள் நினைவில் வைத்திருப்பார்களா என்று பொ. ம. முன்னணிக்கு சந்தேகம். மக்களின் ஞாபகசக்திமிகப் பலவீனமானது, என்பதுஒரு அரசியல் கட்சிஎன்றவகையில்பொ.ம. முன்னணிக்கும் தெரியாத விஷயமல்ல.

அதனால் தான் வீதிகளில் டயர்களைப் போட்டு கொளுத்தோ கொளுத் தென்று கொளுத்தி, கொலை யுகத்தை நினைவூட்டத் திட்டமிட்டது பொ. ம. முன்னணி.

டயர்கள் கொளுத்துவதால் சுற்றுப்புறச் சூழல்களுக்கு ஆபத்தில்லை, சட்டப்படியும் தவறில்லை என்று பொ.ம. முன்னணி செயலாளரான அமைச்சரே கூறியது தான் உச்சக்கட்டத் தமாஷ்.

### ரயர் எரிப்பும் முரண்பாடும்

உள்ளூராட்சிச் சபைகளின் முக்கியபணியே வீதிகளை அழகாக வைத்திருப்பதும், சுகாதாரப் பணிகளைச் சீர் படுத்துவதும் தான், ஆனால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பிரசாரத்திற்கு வீதிகளில் டயர்கள் எரிந்து கடும் புகை மூட்டத்துக்குள் பிரசாரம் செய்ய நினைப்பது எத்தனை பெரிய முரண்பாடு?

எனினும் இன்றைய அரசியலே முரண்பாடுகளின் மொத்த உருவமாகி விட்டதால் இதெல்லாம் பிரசாரதந்திரம் என்ற கணக்கில் சேர்ந்து விடுகின்றன.

ஆனால் இப்போது டயர்களுக்கு பாப விமோசனம்; வீதிகளிலும் கரிப்புகை சுவாசிக்கத் தேவையில்லை.

நாலந்த எல்லாவெல மரணம் ஒன்று போதும் கடந்த கால கொலைகளை எல்லாம் மக்களின் மனக்கண் முன் தோன்றும். அதனால் மாய்ந்து மாய்ந்து கடந்த காலத்தை நினைவூட்ட வேண்டி இருக்காது என்று பொதுமக்கள் முன்னணி தரப்பு திருப்திப் பட்டுக் கொள்ளலாம்.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப் பட்ட (ஒப்பரேஷன் எலக்ஷன் ரூட்) எடிபல இராணுவ நடவடிக்கைகூட நாலந்த எல்லாவெல மரணத்தோடு சட்டென்று அமுங்கிப் போனது.

ஒரே சமயத்தில் இரண்டு பிரசார ஆயுதங்களைப் பயன் படுத்தினால் மக்களின் கவனம் இரு புறமும் சிதறலாம்.

அதனால் ஒப்பரேஷன் 'எடிபல' பற்றிய செய்திகளை ஒத்திப்போட்டுவிட்டு, நாலந்த எல்லாவெல மரணச் செய்தி பற்றிய பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டன.

'ஒப்பரேஷன் எடிபல' இராணுவ நடவடிக்கையை விட 'ஒப்பரேஷன் எல்லாவெல' அரசியல் நடவடிக்கை பொது மக்கள் முன்னணிக்கு அமோகமான வாக்குகளை அறுவடை செய்து கொடுக்கப் போவது உறுதி.

நாலந்த எல்லாவெல மரணம் இல்லா விட்டாலும் பொதுமக்கள் முன்னணிதான் உள்ளூராட்சித் தேர்தலில் முதலிடத்தில் வந்திருக்கும். ஆனால் அடுத்த இடத்தில் உள்ள ஐ.தே. கட்சிக்கும் அதற்கும் இடையில் வாக்குகள் வித்தியாசம் பெரியளவில் இருந்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

இப்போது அந்தச் சந்தேகமும் தீர்ந்துவிட்டது. ஐ.தே. கட்சி திணறிப்போயிருக்கிறது. அனுதாப அலை மட்டுமல்ல, அதிர்ஷ்டக் காற்றும் ஜனாதிபதி பக்கம் தான் அடிக்கிறது.

இல்லாவிட்டால் இப்படியொரு திடீர்த் திருப்பம் நாலந்த எல்லாவெல மரணம் மூலம் நிகழ்ந்திருக்குமா?

நாலந்த எல்லாவெல மரணம் தொடர்பாக சகல குற்றச்சாட்டுக்களும் ஐ.தே. கட்சி மீதே சுமத்தப்பட்டுள்ளன.

நடந்த சம்பவத்துக்கு விளக்கம் சொல்வதைவிட சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கப் பட்டுவிட்டதாகக் காட்டுப்தில் தான் ரணில் அக்கறை கொண்டிருந்தார்.

நாலந்த எல்லாவெல திட்டமிட்டுக் கொல்லப் பட்டதாகத்தான் பொது மக்கள் முன்னணி பிரசாரம் செய்து வருகிறது.

ஆனால் சாட்சியங்களும், சம்பவம் நடைபெற்ற முறையும் திடீர் நிகழ்வு போன்றே தோன்றுகின்றன.

இரத்தினபுரியில் இருந்து ஊர்வலமாக வந்தனர் ஐ. தே,கட்சியினர். கொழும்பில் இருந்து நாலந்த எல்லாவெல எம். பியும், டிலான் பேரேரா எம். பியும், அவரது பாதுகாவலரும் தங்கள் வாகனத்தில் இரத்தினபுரி நோக்கிச் சென்றனர்.

### தற்செயலான நிகழ்வே

இரத்தினபுரியில் உள்ள குருவிற்ற என்னுமிடத்தில் வைத்து ஊர்வலத்தினரும், நாலந்த எல்லாவெல குழுவினரும் எதிரும் புதிருமாகச் சந்தித்தனர்.

அது ஒரு குறுகலானதெரு. ஊர்வலத்தினர் வரும்போது அவர்களை விலக்கிக் கொண்டு வாகனத்தில் செல்வது சிரமம்.

அதுதவிர, கூட்டமாக வருபவர்கள் மாற்றுக்கட்சி முக்கியஸ்தர்களைக் கண்டால் கிண்டல் செய்து கூக்குரலிடுவது வழக்கம்தான்.

நாலந்த எல்லாவெல தான் வாகனத்தைச் செலுத்திச் சென்றார். டிலான் பெரேரா அருகில் இருந்தார். நாலந்த எல்லாவெல நினைத்திருந்தால் தமது வாகனத்தை வேறு குறுக்குப்பாதையில் திருப்பி இருக்கலாம்.

ஆனால் அப்படித் திருப்பிச் செல்லுவது கௌரவப் பிரச்சினை என்று நினைத்திருக்கலாம், என்று தோன்றுகிறது. எனவே எதிரும் புதிருமாகச் சந்தித்துக் கொண்டனர்.

அதன் பின்னர் என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை யாருமே தெளிவான விளக்கம் சொல்லவில்லை.

தாம் செல்வதற்கு வழி விட்டுத் தருமாறு நாலந்த எல்லாவெல கேட்டிருக்கக் கூடும். அல்லது ஊர்வலத்தினர் ஏதாவது கிண்டலடிக்க நாலந்த எல்லாவெலவுக்குக் கோபம் வந்து, வாகனத்தை விட்டு இறங்கி தாக்கப்பட்டிருக்கலாம்.

வாய்த்தர்க்கம் நடந்தது என்று நேரில் கண்ட சிலர் கூறியுள்ளனர். ஊர்வலத்தினர் நாலந்த எல்லாவெலயை சுற்றிக் கூடிவிட்டதைக் கண்ட நாலந்த எல்லாவெலவின்பாதுகாவலர் வானத்தை நோக்கிச் சுட்டதாகவும். அதைத்தொடர்ந்து அவர் மீது ஊர்வலத்தில் இருந்து சுடப்பட்டதாகவும், பின்னர் நாலந்த எல்லவெல மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் முதலில் செய்திகள் வெளியாகின.

தன் மீது முதலில் சுடப் பட்டதாகவும் புல்லட்புரூப் ஜக்கெட் அணிந்திருந்தமையால் உயிர் தப்பியதாகவும் புஞ்சி நிலமே தெரிவித்திருக்கிறார்.

அது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. ஆனால் துப்பாக்கிப் பிரயோகம் முதலில் ஆரம்பிக்கப்பட்டது நாலந்த எல்லாவெல தரப்பில் இருந்து தான் என்பது பத்திரிகைச் செய்திகள் மூலம் உறுதியான தகவல்.

எம்.பியைப் பாதுகாக்கவும் கூட்டத்தைக் கலைக்கவும் அவரது பாதுகாவலர் வானத்தை நோக்கிச் சுட்டிருக்கலாம். அது தவறும் அல்ல.

ஆனால் பொது மக்கள் முன்னணி பதவிக்கு வந்த பின்னர் ஐ.தே. கட்சிக்கு எதிராக நடைபெற்ற சம்பவங்களால் உஷாரடைந்த புஞ்சி நிலமே, மஹிந்த ரத்னதிலகா போன்றோர் தாமும் சுடப்படலாம் என்று நினைத்து முந்திக் கொண்டிருக்கலாம்.

ஆனைமடுவிலும், நீர் கொழும்பிலும் ஐ. தே. கட்சியினருக்கு எதிரான துப்பாக்கிச் சூடுகள் நடத்திருக்கின்றன.

நீர்கொழும்பில் நீதிமன்றம் சென்று திரும்பிய ஐ.தே. கட்சியைச் சேர்ந்த ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 20.09.1996இல் இச் சம்பவம் நடைபெற்றது.

ஆனைமடுவ சம்பவத்தில் தசநாயக்க எம்.பி. நீர் கொழும்பு சம்பவத்திற்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேமீதும் ஐதே. கட்சியினர் குற்றம் சாட்டினார்கள்.

வன்முறை என்பது ஐ. தே. கட்சியால் மட்டும்தான் மேற்கொள்ளப்பட்டது என்றில்லை.

ஆனைமடுவ, நீர்கொழும்பு சம்பவங்கள் பொ. ம. முன்னணியும் வன்முறையைக் கையில் எடுக்கத் தயங்கும் அணியல்ல என்பதற்கு உதாரணங்கள்தான்.

ஆனாலும் பிரேமதாசா காலத்தில் இருந்து ஐ. தே. கட்சி என்றால் கொலைக்கு அஞ்சாத கட்சி என்னும் எண்ணம் திட்டமிட்டு வளர்க்கப் பட்டுவிட்டது.

ஆனால் பொதுமக்கள் முன்னணிக்கு அப்படியான முத்திரை இன்னமும் குத்தப்பட வில்லை. பெண் ஒருவரே தலைவியாக இருப்பதாலும் அம்முத்திரை குத்தப்படாமல் பொ. ம. முன்னணி தப்பிக் கொள்கிறது.

ஆனைமடுவ, நீர்கொழும்புச் சம்பவங்களை பொதுமக்கள் முன்னணிக்கு எதிரான அரசியல் பிரசாரமாக்க ஐக்கிய தேசியக் கட்சியால் முடியவில்லை. அதுவும் ஒரு பலவீனம்.

கடந்த ஆண்டு பொதுமக்கள் முன்னணியால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களை மக்கள் மறந்து விட்டனர்.

ஆனால் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அதிகாரம் கையில் இருப்பதால், பொதுமக்கள் முன்னணியினரால் தாம் தாக்கப்படலாம் என்று பயந்து கொண்டேயிருப்பர்.

அதன் வெளிப்பாடுதான் — இரத்தினபுரியில் ஐ.தே.கட்சி பிரமுகர்கள் தாம் முந்திக் கொள்ள நினைத்ததும் என்று தோன்றுகிறது.

அது மட்டுமல்லாமல் மஹிந்த ரத்னதிலக, புஞ்சி நிலமே எம். பி. இருவரும் இரத்தினபுரியில் செல்வாக்கான சண்டித்தன அரசியல் வாதிகள்.

எனவே தாம் முந்திக் கொள்ள நினைத்து விரைவாகச் செயற்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

நாலந்த எல்லாவெல கொலைக்கு காரணம் மஹிந்த ரத்னதிலகவும், புஞ்சி நிலமேயும் தான் என்று குற்றம் சாட்டப்பட்டாலும்கூட, அதற்கான உறுதியான சாட்சியங்கள் இல்லாதது தான் வழக்கு நடக்கும் போது பலவீனமான விஷயமாக இருக்கும்.

புஞ்சி நிலமேமீது ஏற்கனவே பல குற்றச் சாட்டுக்கள் இருக்கின்றன. குற்றம் சாட்டப் பட்டுள்ள இன்னொருவர் மஹிந்த ரத்னதிலக.

1994 ஆம் ஆண்டுவரை மஹிந்த ரத்னதிலக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிரமான பிரமுகர். இரத்தினபுரி நகரசபைத் தலைவராகவும் இருந்தவர். 'மஹிந்த அப்போ' என்று அழைக்கப்படுபவர்.

இன்னொரு செண்டிமெண்டான விஷயம் என்ன தெரியுமா? ஜே. வி. பி. கிளர்ச்சி நேரத்தில்நாலந்தஎல்ல வெலவின்தந்தையானநந்த எல்லாவெலவின் உயிரைகாப்பாற்றியது மஹிந்தா ரத்னதிலகவின் துப்பாக்கியும் அடியாட்களும்தான்.

### தோளில் போட்டு வளர்த்த பிள்ளை

இரத்தினபுரி மாவட்ட முன்னாள் எம். பி யான நந்தா எல்லாவெல காலமாகி விட்டார். அவரது இடத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், கோண்டாவில்.

**A/L 97 DAY CLASS**

வர்த்தகம் — திரு. பசில்
கணக்கியல் — திரு. பாலவாசன்
பொருளியல் — திரு. இராஜேஸ்வரன்
அளவையியல் — திரு. R.P சர்மா

புதிய பிரிவு ஆரம்பம்:

04 - 03 - 1997 நண்பகல் 12. 00 மணி

(45583)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 02 — 1908

மறைவு: 29 — 01 — 1997

அமரர்

### கந்தப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

(மலாயன் பென்சனியர்)

அன்புக்கு அணிகலனாய் அறிவுக்கு ஆசானாய் பண்பினில் உயர்ந்தோனாய் பாசத்தின் ஒளிவிளக்காய் கடமையே கண்ணாய் நேர்மையே நோக்காய் வாழ்ந்து வழிகாட்டி எம்மை நல்ல நிலைக்கு ஆளாக்கி வாழும்படி செய்த எம் தந்தையின் நினைவுகள் என்றும் அழியாத சுவடுகள்

அன்னாரின் மறைவையொட்டி இறுதிக் கிரியைகளில் கலந்து அனுதாபங்களைத் தெரிவித்த எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

டாக்டர் சி. சதாசிவம்,
வட்டுக்கோட்டை றோட்,
சித்தங்கேணி.

(44568)

## முறைசாரா பயிற்சி பெறுபேறுகள்

வடமராட்சி, மார்ச் 2

யாழ். வலயம் — 2 முறைசாராக கல்விப் பிரிவினரால் வடமராட்சியில் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடமிருந்து பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வதிரி திருஇருதயக் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவிருப்பதாக முறைசாராக்கல்வி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-173)

## குடிதண்ணீர் பெற கிணறு

சண்டிலிப்பாய், மார்ச்2

கட்டுடைப்பகுதியில்பொது மக்கள் குடிதண்ணீர் பெற வசதியாக கட்டுடை அரசடி விநாயகர் ஆலயத்துக்கு சமீபமாக சுமார் 45 ஆயிரம் ரூபா செலவில் பொதுக்கிணறு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

(ஐ-135)


**A\L 96 DAY**

2ஆவது
பிரிவு ஆரம்பம்:-

பொருளியல்:- Mr. சண்
கணக்கியல்;- Mr. நித்தி
வர்த்தகம்:- Mr. முரளி
அளவையியல்:- R.P.சர்மா

ஆரம்பம்:- 03-03-97
(10 மணி)

**C.C.A.**

யாழ்ப்பாணம்.

(45 588)


## தேர்தலில் அரசுக்கு ...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்குத்தான் நாலந்த எல்லாவெலவைப்போட்டியிடவைத்தார்கள். மஹிந்தரத்னதிலக தோளில் போட்டு சீராட்டி வளர்த்த பிள்ளைதான் நாலந்தஎல்லாவெல.தோளில் போட்டு வளர்த்த பிள்ளையை சுடுவதற்கு எப்படி மனம் வந்தது என்பதும் பொ.ம. முன்னணி இரத்தினபுரியில் எழுப்பியுள்ளசெண்டிமெண்டான கேள்வி.

ஜே. வி. பி. காலத்தில் இரத்தினபுரி மாவட்ட அரசியல்வாதிகள் பலரின் உயிரைக் காப்பாற்றிய மஹிந்த ரத்னதிலக இப்போது அப்பட்டமான கொலைகாரராக இனம் காணப்பட்டுள்ளார்.

புஞ்சி நிலமே எம். பி. யின் வீடும், மஹிந்தாவின் வீடும் முற்றாக எரிக்கப்பட்டுவிட்டன. அவர்களது குடும்பத்தினர் எப்படியோ தப்பியோடிவிட்டனர். பல கடைகள், வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

நலாந்த எல்லாவெலவின் இறுதிச்சடங்கில் பொலீஸார் தாக்கப்பட்டனர். மரணச் சடங்குக்கு சென்ற கார்கள் மீது கூட கல்லெறியும் அளவுக்கு கட்டுப்பாடற்ற மனநிலை காணப்பட்டது. ஆனால் இவையெல்லாம் நியாயமான உணர்ச்சி வெளிப்பாடுகளாகக் கருதப்பட்டுவிட்டன. அரச பிரசார சாதனங்களும் நாலந்த எல்லாவெல மரணத்தின் பின்னர் நடைபெற்ற சம்பவங்களின் மறுபாகத்தைக் காண்பிக்கவேயில்லை.

### ஜனாதிபதியின் கூற்று

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது மாதிரி ''எந்த மொழி புரிகிறதோ அந்த மொழியில் அவரவர்களோடு பேசுவோம்!'' என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இதையே பிரேமதாசா மாதிரியான ஒருவர் கூறியிருந்தால் ''கொலைகார யுகத்தின் அவதார புருஷர்'' என்று சித்திரித்திருப்பார்கள்.

மென்மையான புன்னகை வசீகரமும்மிக்க ஜனாதிபதி சந்திரிகா கூறியிருப்பதால் ''துணிச்சலான பேச்சு'' என்று வியக்கப்படுகிறது.

எனினும் நாலந்த எல்லாவெல மரணத்தின் பின்னர் நடைபெற்ற தமது தரப்பு அத்துமீறல்களை ஜனாதிபதியோ அமைச்சர்களோ கண்டிக்காமல் விட்டிருப்பது வன்முறைக்கு வன்முறை என்பதை ஆதரிப்பதாகிவிடுகிறது.

17 வருடம் அடிபட்டவர்கள் இப்போது திருப்பிக் கொடுப்பதை எப்படி நிறுத்துவது என்று பொ.ம. முன்னணித்தலைவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை.

எப்படியோ உள்ளூராட்சித் தேர்தலில் பொதுமக்கள் முன்னணியின் வெற்றியை இனிப் பிரபாகரனால் கூட சேதப்படுத்த முடியாது.

அதற்காக படை நடவடிக்கையை வன்னியில் அரசாங்கம் மேற்கொள்ளாது என்று அர்த்தமல்ல.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தல் வெற்றிக்கு போர்முனை வெற்றிச் செய்தியை நம்பியிருக்க வேண்டிய அவசியம், மற்றும் புலிகள் பாரிய தாக்குதல்களை எங்காவது நடத்தினால் தமது வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படுமோ என்ற சந்தேகம் இரண்டும் இப்போது சுத்தமாகக் கிடையாது.

ஏனெனில் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது.

(நன்றி: தினமுரசு)


## இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெந்திற்கு நிகரான தரத்தினையுடைய இறக்குமதி செய்யப்பட்ட சிமெந்து (DIAMOND-525 R) எம்மிடம் விற்பனைக்குள்ளது.

**50 Kg நிறையுடைய பைக்கற் ஒன்றின் விலை ரூபா 530/-**

(ஐந்நூற்று முப்பது)

சிமெந்து பெற விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பொறுப்பதிகாரி
இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

சிமெந்து கூட்டுத்தாபனம்.
65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-226)



## நியூ விமாகி

### 20 ஆண்டுகள் பூர்த்தி செய்த நியூ விமாகி

உங்களுக்கு தரமான சிறந்த பாவனைப் பொருள்களை நிதானமான விலையில் தந்து வடமாகாணம் முழுவதிலும் அழியாத பிரபல்யமான பெயரைப் பெற்ற ஸ்தாபனம் என பெருமைப்படுகின்றோம்.

C. I. C. பெயின்ற் - செரமிக் கூ. ஸ்தாபனம்
லங்கா WALL TILES ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்களும்

1) C. I. C பெயின்ற் வகைகளும்
2) மாபிள் கற்கள்
3) குளியலறை இணைப்புக்கள்
4) கண்ணாடிகளும் ($\frac{1}{2}$ நூல், 1 நூல் Plane Glass)
5) காட்போட், போமிக்கா சீற்
6) ரெக்சின் தரை விரிப்புகளும் - பலவிதமான டிசைன்களில்
7) இரும்பு கம்பி வகைகளும் - 3 நூல் 4நூல்
8) P. V C பைப் 4 இஞ்சி
9) ரிங்கர் வேலைக்கு தேவையான B. I. சீற் மற்றும் G. I. சீற்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் உங்களின்

**நியூ விமாகி**

27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ தரம் விரும்புவோர் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
உங்கள் **நியூ விமாகி**

(45574)


## வாழ்த்துகின்றோம்

**51ஆவது திருமணநாளை (02-03-97)**
நிறைவு செய்யும்

**திரு. திருமதி நீக்கலஸ் தம்பதியர்**
(செல்லப்ஸ் ஸ்ரூடியோ - யாழ்ப்பாணம்)

''மலர் அகம்'' வளன்புரம், கொழும்புத்துறையில் வசிக்கும் திரு. திருமதி நீக்கலஸ் தம்பதியினரின் 51ஆவது திருமண நாளில் நிறைந்த உடல், உள, சுகபலம் பெற்று நீடூழி காலம் வாழ்கவென மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றனர்.

தகவல்:

திருமதி ம. நி. தெய்வேந்திரா

வளன்புரம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(45563)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## வேண்டாம் புகைத்தல்!

இளவயதினர் புகைபிடிப்பதைத் தடுக்கு முகமாக, அமெரிக்காவில் கிளின்ரன் அரசாங்கம், புதிய சட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. 18 வயதுக்குக் குறைந்தவர்கள் சிகரெட் மற்றும் புகையிலை வகைகளை வாங்குவதைத் தடுக்க ஏற்பாடாகியுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இவற்றை விற்கக் கூடியதாக 27 வயதுக்கு உட்பட்டவர்கள் சிகரெட் வாங்கும் போது, அவரவர் அடையாள அட்டைகளைக் காட்டியே வாங்கலாம்.

இது புகைத்தலை முற்றாகக் தடை செய்யத் துணை புரியாது என்றாலும் அந்த வழியில் ஒரு சிறந்த முன்னோடி.

இலங்கையில் புகைத்தல் மற்றும் மது ஒழிப்புக் குறித்து நீண்ட காலமாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் இயக்கங்கள் நடத்தப்பட்டும் வந்தாலும், நடைமுறையில் பெரிதாக எதுவும் நடக்கவில்லை. சிகரெட் விளம்பரங்களில் புகைப்பது உடலுக்கு ஆபத்து என்ற எச்சரிக்கை வாசகம் பொறிப்பதோடு நின்று விட்டது. மதுபான ஒழிப்பில் அதுதானும் இல்லை.

சமீபத்தில் தான் தொலைக்காட்சியில் புகைத்தல் விளம்பரங்களுக்கும் காட்சிகளுக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

எமது பகுதியை, தமிழர் பிரதேசங்களைப் பொறுத்த வரையில் புகைத்தல் மற்றும் மதுப்பாவனை என்றும் இல்லாத அளவில் இளையோர் வட்டத்தில் இப்போது தீவிரமாகப் பரவி வருவதாக சமூகநலன் விரும்பிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தத் தீய பழக்கங்களுக்கு, உடல் நலத்தைக் கெடுக்கும் பழக்கங்களுக்கு, சமூகத்தை நோயாளிகளாக்கும் பழக்கங்களுக்கு, பலரின் வாழ்க்கையைச் சீரழிக்கும் பழக்கங்களுக்கு இளவயதினர் அடிமைகளாகி விடாமல் தடுப்பதில் மிகப் பெரிய பங்கு பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்குமே உண்டு.

அரசாங்கம் விரும்பினால் கூட, மது அருந்துதல், புகை பிடித்தலை முற்றாக ஒழித்து விட முடியாது. பாடசாலைகள் மற்றும்பொதுநல நிலையங்கள் மட்டத்தில் அவற்றின் தீமைகளை விளக்கிப் பிரசாரம் செய்வது அவசியம். பிரசாரம் வெறும் பணச் செலவுக்காகவென்று இருக்கக் கூடாது. இப் பழக்கத்தின் பாதிப்பு இளவல்களின் நெஞ்சைத் தொட்டு அவர்களை உணர வைப்பதாக இருக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பெற்றோரும் ஆசிரியரும் இது விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும். நாளாந்தம் இதற்கென தமது நேரத்தை ஒதுக்கி, அன்பாகப் பேசி, இன்சொல்லாடி, புத்திமதி கூறி இளவயதினர் நெஞ்சில் புகைத்தல், மது அருந்துதல் ஆகியவற்றின் பாதிப்பை பதியச் செய்தல் வேண்டும். இதனை ஒரு சவாலாகக் கருதிச் செயற்பட வேண்டும்.

சிறுவர்களும், இளைஞர்களும் திருப்பிக் கேள்வி கேட்காமல் இருக்க ஏதுவாக பெற்றோரும் ஆசிரியர்களும் இப்பழக்கங்களை முதலில் தாம் துறந்துவிட மன அடக்கம் உள்ளவர்களாக மாற வேண்டும். முன்னோடிகளாக விளங்கவேண்டும். பெற்றோர் — பிள்ளைகள், ஆசிரியர் —மாணவன், சமூக நல மன்றங்கள் — அங்கத்தவர்கள் என்ற ஆளுக்கு ஆள் புத்திமதியே நற்பழக்கத்தை ஊட்டச் சிறந்தவழி.

# வன்செயலால் பாதிப்புற்றோருக்கு 83க்குப்பின் நட்ட ஈடு வழங்கவில்லை!

## படிவங்களைக் கையாள்வதில் அரச அதிபர்கள் அசமந்தம்

கொழும்பு, மார்ச் 2

1983 ஆம் ஆண்டுக்குப் பின் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களில் எவருக்குமே இதுவரை அதற்கான நட்டஈடுவழங்கப்படவில்லை.

உரிய படிவங்கள் அரசாங்க அதிபர்களால் சரி பார்க்கப்பட்டு இன்னும் அனுமதிக்கப்படாத காரணத்தால் எவருக்கும் நட்ட ஈடு வழங்கப்படவில்லை.

—இவ்வாறு விளக்கமளித்துள்ளார் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எம். ஜெயராஜ்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வழங்கவுள்ள நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பான விவரங்களை அவர் வெளியிட்டுள்ளார். அவர் அளித்துள்ள விளக்கம் வருமாறு:-

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவுகள் பற்றி பொதுமக்கள் மிகவும் ஆர்வத்துடன் கடிதங்கள் மூலம் தெரிவித்தவண்ணம் உள்ளனர்.

இவர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டனர், எப்போது பாதிக்கப்பட்டனர் என்பன போன்ற விவரங்களை நாங்கள் கேட்டிருந்த போது சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர்எங்களுக்கு விவரங்களை அனுப்பியிருந்தார்கள்.

அவர்களுக்கு தற்போது நிவாரணம் வழங்க ஒரு படிவத்தைத் தயார் செய்து அந்தந்தப் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பியிருந்தோம். எனவே பாதிக்கப்பட்டவர்களை தங்கள் தங்கள் பிரதேச செயலாளர்களிடம் இப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படிவங்கள் வெள்ளை நிறத்திலும் மஞ்சள் நிறத்திலும் இணைப் பிரதிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இரு நிறத்திலான படிவங்களும் ஒரே தொடர் இலக்கத்தைக் கொண்டிருக்கும்.

இந்தப் படிவத்தை அவர்கள் நிரப்பி தங்களது பிரிவு கிராம சேவை உத்தியோகத்தர் ஊடாக தங்களது பிரதேச செயலாளரிடம் (உதவி அரசாங்க அதிபரிடம்) கொக்கவேண்டும்.

இவ்வாறு கொடுக்கப்படும் பத்திரங்களை பிரதேச செயலாளர் சரிபார்த்து தேவையான ஆவணங்களை விண்ணப்பதாரர்களிடம் பெற்று படிவங்களை அரசாங்க அதிபரிடம் கையளிப்பார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈட்டை வழங்குபவரும் அரசாங்க அதிபரேயாவர். உங்களுக்குரிய நட்ட ஈடு அரசாங்க அதிபரால் உங்கள் கிராம சேவை உத்தியோகத்தர் ஊடாக வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படும்.

பத்திரங்களைப் பூர்த்தி செய்து கையளித்தவர்களில் இதுவரை எத்தனை பேருக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது என அறிய நீங்கள் ஆவல் கொண்டிருக்கலாம்.

இந்தப் படிவங்கள் அரசாங்கஅதிபர்களால் சரிபார்க்கப்பட்டு இன்னும் அனுமதிக்கப்படாத காரணத்தினால் இன்னமும் எவருக்கும் நட்ட ஈடு வழங்கப்படவில்லை.

கொடுப்பனவுகளுக்குத் தேவையான பணம் எமது அமைச்சினால் அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பின் 20 சதவீதம் அல்லது ஒருலட்ச ரூபா. இவற்றில் எது அதிகமோ அத்தொகை நட்ட ஈடாக வழங்கப்படும்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் நீங்கள் மூன்று தடவைகள் பாதிக்கப்பட்டிருக்கலாம். அந்த இழப்புகள் பற்றிய பொலீஸ் முறைப்பாட்டு அறிக்கைகளை நீங்கள் வைத்திருக்கலாம். அவற்றைச் சமர்ப்பிக்கும் போது ஆகக் கூடுதலாக எவ்வளவு வழங்க முடியுமோ அத்தொகை தீர்மானிக்கப்பட்டு நட்ட ஈடாக வழங்கப்படும்.

இந்த நட்ட ஈட்டை வழங்குவது, என்னென்ன ஆவணங்கள் தேவை என்பன பற்றிய விவரங்கள் படிவங்களில் தரப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பான சுற்றறிக்கையை சகல அரசாங்க அதிபர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளோம். இச் சுற்றறிக்கையில் அனைத்து விவரங்களும உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே தேவையான தகவல்களை அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் — இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-10)

## மன்னாரில் இருந்து தரைவழியாக செல்லப் புதிய பாதுகாப்பு விதிகள்!

### நேற்று முதல் அமுலுக்கு வந்தன

கொழும்பு, மார்ச். 2

மன்னாரில் இருந்து வவுனியா மற்றும் கொழும்பு போன்ற இடங்களுக்குதரைப் பாதை ஊடாகப் பயணம் செய்பவர்களுக்கு நேற்று முதல் புதிய பாதுகாப்பு விதிகள் அமுல்படுத்தப்பட்டன.

இதன்படி மன்னாரில் இருந்து வவுனியாவுக்கு செல்பவர்கள் மன்னாரில் பொலீஸ் அத்தியட்சகரின் அனுமதியுடன் பயணம் செய்ய முடியும். கொழும்பு செல்பவர்கள் பொலீஸ் அத்தியட்சகரின் அனுமதியுடன் இராணுவ இணைப்பதிகாரியின் அனுமதியையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வவுனியா செல்பவர்களுக்கு ஒரு நிறமும், கொழும்பு செல்பவர்களுக்கு ஒரு நிறமும் கொண்ட இரு வேறு நிறங்களிலான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

கொழும்பு போன்ற இடங்களுக்குச் செல்வோர் ஒரு விண்ணப்பப்படிவத்தில் தங்கள் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். அந்த விவரங்கள் சரியானவையா என்பது அந்தந்தப் பகுதி பொலீஸார் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின் அனுமதி வழங்கப்படும்.

புதிதாக அமுல் செய்யப்பட்டுள்ள இந்த நடைமுறையைக் கவனிப்பதற்காக விசேட பொலீஸ் அதிகாரிகள் குழு ஒன்று வவுனியாவில் இருந்து மன்னாருக்குச் சென்றுள்ளது. (ஐ)

## துன்ப துயரங்களிலும் நம்மை பாதுகாக்க வல்ல உயிருள்ள நீர்

இன்று தவக்காலத்தின் மூன்றாவது ஞாயிறு. இன்றைய கருப்பொருள் உயிர் உள்ள நீரைப் பருகுவதற்கு நாம் எப்போதும் ஆர்வமாக இருக்க வேண்டும் என்பதாகும்.

இஸ்ராயேல் மக்களுடைய 40 ஆண்டு கால விடுதலைப் பயணத்தில் நடந்த சம்பவங்களில் இதுவும் ஒன்று. சீன பாலைவனத்தில் அவர்கள் பயணம் செய்து கொண்டிருந்தபோது அங்கு அவர்களுக்கு குடிக்கத் தண்ணீர் இருக்கவில்லை. அவர்களோ தம்மை அப்போது வழி நடத்தி வந்த தலைவரான மோயிசனோடு வாதாடி சண்டை பிடிக்கத் தொடங்கினார்கள். மோயிசனோ ஆண்டவரிடம் முறையிட்டார். ஆண்டவர் மோயிசனின் குரலைக் கேட்டார். ஆண்டவர் மோயிசனிடம் ''இஸ்ராயேல் தலைவர்கள் சிலரை உன்னோடு அழைத்துக் கொண்டு மக்கள் முன் செல். நைல் நதியை அடித்த உன் கோலையும் கையில் எடுத்துக் கொண்டு போ. இதோ நான் அங்கே ஒரேபில் உள்ள பாறையில் உனக்கு முன் நிற்பேன்; நீ பாறையை அடி. மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்'' (யாத். 17: 3 - 7) என்றார். தண்ணீர் கிடைத்தது; மக்கள் பருகினார்கள்.

ஒரு முறை இயேசு சமாரியாவில் உள்ள சிக்கார் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார். பயணத்தால் களைப்புற்ற இயேசு யாக்கோபின் கிணற்றருகில் அமர்ந்து தண்ணீர் மொள்ள வந்த சமாரியப் பெண்ணிடம் ''குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்'' என்று கேட்டார். அச் சமாரியப்பெண் அவரிடம் ''நீர் யூதர். நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?'' என்று கேட்டாள். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை.

இயேசு அவளைப் பார்த்து ''இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும். நான் கொடுக்கும் தண்ணீர் அதைக்குடிப்பவர்க்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்'' என்றாள்.

சமாரியப்பெண் தன் தனிப்பட்ட வாழ்வை எல்லாம் அறிந்த அவரை இனங்கண்டு ''நான் ஒரு போதும் தாகம் அடையாதபடி அந்த உயிர் உள்ள நீரை எனக்குத் தாரும்'' (அரு.4:5-42) என்றார்.

முதலாம் வாசகத்தில் (யாத். 17: 3 - 7) இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்ணீர், நற்செய்தி வாசகத்தில் (அரு. 4: 5- 42) இயேசு கொடுக்கின்ற உயிர் உள்ள நீரை - இயேசுக்கிறிஸ்துவை, மெசியாவை (1 கொரி. 10: 4) முன்குறித்து நிற்கிறது.

தண்ணீர் ஒரு படைப்புப் பொருள் இறையியல் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது அது படைப்பாற்றலைத் தன்னுள் கொண்டுள்ளது.

உலகத்தின் தொடக்கத்திலே தண்ணீருக்கு அர்ச்சிக்கும் ஆற்றலை அளிக்க நீரின் மேல் ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார். வெள்ளப் பெருக்கை புதுப் பிறப்பின் அடையாளமாக்கி அந்த ஒரே பொருளின் செயலினால் பாவம் முடிவுறவும் புண்ணியம் தொடக்கம் பெறவும் செய்தார்.

இஸ்ராயேல் மக்களின் 40 ஆண்டுகால விடுதலைப் பயணத்தில் ஏற்பட்ட எல்லா அனுபவங்களிலும் நீர் முதலிய பொருள்கள் கொடுத்துப் பாதுகாத்தது போல, நமது துன்ப துயர போராட்டப் பயண நாள்களிலும் நம்மைப் பாதுகாக்க ஒரு நீர் உண்டு. சமாரியப் பெண் வேண்டிக் கொண்ட அந்த உயிர் உள்ள நீர் இயேசுவே. துணிவோடு இருப்போம். அவர் துணை நிற்பார்.

அருட்திரு. ரூபன்மரியாம்பிள்ளை

**தவக்காலச் சிந்தனை**

**3 ஆவது ஞாயிறு**

## நாளை

**மாசி 20**

**திங்கட்கிழமை**

**திதி:** நவமி முன்இரவு 8-39 வரை.

**நட்சத்திரம்:** கேட்டை முற்பகல் 7.57 வரை.

**ராகுகாலம்:** 7.57-9.27

**சுபநேரம்:** 12.27-1.57

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நடிகர் பிரபு மீதும் விசாரணை

சென்னை, மார்ச் 2

ஜெயலலிதாவின் முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரனின் ஆடம்பர கல்யாணம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ள லஞ்ச ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகனான நடிகர் பிரபுவையும் விசாரணைக்கு உட்படுத்தினர்.

கடந்த செவ்வாயன்று நடிகர் பிரபுவை அதிகாரிகள் ஒரு மணி நேரம் விசாரணை செய்தனர். (ஐ)

## தியவன்ன ஓயா அணைக்கட்டில் துப்பாக்கி ரவை

கொழும்பு, மார்ச் 2

அம்பத்தலவில் உள்ள குடிதண்ணீர் விநியோக இயந்திர நிலையத்துக்கு சமீபமாக தியவன்ன ஓயா அணைக்கட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 5 இயந்திரத் துப்பாக்கி ரவைகள் கோர்வையாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மீன் பிடிக்கச் சென்ற ஒரு தந்தையும், மகனும் இதனைக் கண்டெடுத்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (இ-3-150)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்-முஸ்லிம் உறவை சீர்குலைக்க 3ஆம் சக்திக்கு இடமளிக்கக் கூடாது

## முஸ்லிம் தலைவர்களிடம் புலிகள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 2

''எமது போராட்டத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தும் அனைவரும் எமது எதிரிகளே. இதில் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடு கிடையாது. முஸ்லிம் மக்களுடன் ஐக்கியமாக வாழவே விரும்புகின்றோம். மூன்றாவது சக்தி எம்மிடையிலான உறவைக் குலைக்க முற்படஅனுமதிக்கக்கூடாது. அப்படியான சக்திகளை இனங்கண்டு செயற்பட வேண்டும்.''

கடந்த புதன்கிழமை ஒட்டமாவடியில் முஸ்லிம் பிரமுகர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம் பெற்ற சந்திப்பின் போது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட புலிகள் அமைப்பின் அரசியற் பொறுப்பாளர் கீதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே தோற்றுவிக்கப்பட்ட முரண்பாடுகளைத் தீர்க்க இருதரப்பினரும் பரஸ்பர இணக்கத்தைப் புரிந்துணர்வுடன் ஏற்படுத்துவது அவசியம் ஆகும்.

இதற்காக எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளையும் பேசித்தீர்ப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம். இன்றைய சந்திப்பு வரவேற்கக் கூடியது மட்டுமல்ல; புரிந்துணர்வையும் ஏற்படுத்தும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டின் பின் இவ்வாறான சந்திப்பு இடம் பெற்றிருக்கிறது. தீய சக்திகளால் தோற்றுவிக்கப்பட்ட முரண்பாடுகளைப் போக்குவது அவசியமாகும். முஸ்லிம் மக்களுக்கு எமது போராட்டத்தை தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். பக்க சக்தியாக எமக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கையை இத்தகைய சந்திப்புக்கள் ஏற்படுத்தும்.

நாம் ஒருபோதும் அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை. பரஸ்பர சந்திப்பு மூலம் சிறு பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வரலாம். கருத்து முரண்பாடுகளைத் தவிர்க்கலாம்.

தமிழ்ப் பிரமுகர்களைச் சந்தித்து அயல் கிராமங்களில் முஸ்லிம்கள் பாதிக்கப்படாதவாறு நடவடிக்கை எடுப்போம். அண்மைக் காலங்களில் தமிழ் — முஸ்லிம் கலவரங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலேயே நடைபெறுகின்றன. எமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் எங்கு பிரச்சினை நடந்தாலும் முஸ்லிம் மக்கள் வந்து தாராளமாக தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கல்குடா தொகுதி முஸ்லிம் பள்ளிவாசல்கள், நிறுவனங்களின் சம்மேளனத்தின் தீர்மானத்துக்கிணங்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆதரவோடு இலுப்படிச்சேனையில் இடம் பெற்ற இச் சந்திப்பின் போது, புலிகளின் சார்பில் அரசியல் பொறுப்பாளர் கீதன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட புலிகளின் இராணுவத் தளபதி ராம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் விசு மற்றும் முக்கியஸ்தர்களில் ஒருவரான மாஷல் ஆகியோரும் —

பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் சார்பில் எஸ். எல். எம், ஹனிபா, வர்த்தகர் எம். ஆதம்பாவா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நண்பகல் 12.50க்கு ஆரம்பமான இச்சந்திப்பு இரண்டு மணி நேரம் நீடித்தது. (இ-5)

## இந்திய பட்ஜெட்

புதுடில்லி, மார்ச் 2

ஐக்கிய முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் ப.சிதம்பரம் நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்தியாவின் பாதுகாப்புச் செலவுக்கு 23 சதவீத நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## பாகிஸ்தானில் வெள்ளிக்கிழமை விடுமுறை ரத்து!

இஸ்லாமா பாத், மார்ச் 2

பாகிஸ்தானில் நடைமுறையில் இருந்து வந்த வெள்ளிக்கிழமை விடுமுறை நீக்கப்பட்டிருக்கிறது.

கடந்த இருபது ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இந்த விடுமுறையை புதிய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மாற்றியுள்ளார்.

மிகவும் துணிச்சலான நடவடிக்கை எனக் கருதப்படும் இந்த முடிவை தீவிர மதவாதிகளின் லேசான எதிர்ப்புக்கு மத்தியில் நவாஸ் ஷெரீப் நிறைவேற்றியுள்ளார். (ஐ)

### இன்று...

கப்பலில் 500 பயணிகளும்— செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களின் பட்டியல் இலக்கம் 540 க்கு உட்பட்டவர்கள் இத்தினங்களில் காலை 7.00 மணிக்கு முன்பாக யாழ்.மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

### 'றோ'..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தார்.

இந்நிலையில் ராஜஸ்தானில் தங்கியிருந்த வரதராஜப்பெருமாள் ''றோ'' அதிகாரிகளால் அவசரம், அவசரமாக மாலைதீவுக்குச் சொந்தமான தீவு ஒன்றுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். மாலைதீவு அரசுக்குத் தெரியாமலேயே அவர் அங்கு வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் ஜெயின் கமிஷன் முன் வரதராஜப்பெருமாளை ஆஜர் செய்யுமாறு நீதிபதி கேட்டபோது, அவர் இந்தியாவில் இல்லை என்று சி. பி. ஐ. அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இதன்பின் மீண்டும் வரதராஜப்பெருமாள் ராஜஸ்தானுக்கு அழைத்துவரப்பட்டு அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளார்.

வரதராஜப்பெருமாள் ஜெயின் கமிஷன் முன் சாட்சியம் அளித்திருந்தால் சில தகவல்கள் வெளியாகி விடலாம் என்பதாலேயே இப்படி ''றோ'' அதிகாரிகள் நடந்துள்ளனர் என்று பிரஸ்தாப கொழும்பு தமிழ் வார ஏடு மேலும் தெரிவித்தது, (இ-3-150)

# உள்ளூராட்சி தேர்தலுக்கு முன் பல இடங்களில் வன்செயல்கள்

கொழும்பு, மார்ச் 2

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களுக்கு முன் நாடு முழுவதும் பரவலாக ஆங்காங்கே வன்முறைகள், கலவரங்கள் வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நாட்டின் அரசியல் உறுதித் தன்மையும் இதனால் பாதிக்கப்படலாம் என்றும் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்டுள்ள இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெலவின் அனுதாப அலையை தேர்தலுக்கு நன்கு பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது என்று கூறப்படுகிறது. (இ-3)

### புஞ்சிநிலமேக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் அதனைக் கைப்பற்றி இருந்தனர்.

அதுபற்றி புஞ்சிநிலமே தனது நண்பரான பிரதி அமைச்சருக்குத் தெரிவித்தார் என்றும் —

அந்த உடையை விடுவிக்குமாறு அந்த பிரதி அமைச்சர் சுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பல்கலைக் கழக மாணவி திரிமா வித்தாரண படுகொலை மற்றும் இரு கொலைகள் தொடர்பாக புஞ்சி நிலமேக்கு எதிராக இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளில் ஆறு ஆண்டுகள் கழிந்தும் இன்னும் ஆரம்ப விசாரணைகளே முடிவடையாத நிலையில் உள்ளதாக நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (இ-10)

## மட்டக்களப்பில் கண்ணிவெடி; பொலீஸ் வாகனம் சேதம்

மட்டக்களப்பு —கல்முனை பிரதான வீதியில் உள்ள தோற்றாத் தீவு என்னும் இடத்தில் கடந்த வியாழக் கிழமை பொலீஸ் வாகனம் ஒன்று கண்ணிவெடியில் அகப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது பொலீஸ் வாகனம் சிறிது சேதமடைந்ததாகவும் —

பொதுமக்களில் ஐவர் காயமடைந்ததாகவும் அரசு தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-5)

### பிரதமராகும்....

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

தமது குறிப்புக்களை இந்தியாவில் உள்ள பிரபல சோதிடர் ஒருவருக்கு அனுப்பி இருந்ததாக 'யுக்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த மூன்று அமைச்சர்களுக்குமே பிரதமராகும் யோகம் இருப்பதாக அந்தச் சோதிடர் தெரிவித்தாராம்.

இதில் ஓர் அமைச்சர் தனது பாதுகாப்பு குறித்து ஏற்பட்ட அச்சம் காரணமாகவே தனது பலனை அறிய ஜாதகத்தை அனுப்பினார் என்றும் —

ஆனால் அவரது ஜாதகத்தைப் பார்த்த சோதிடர் அவருக்கும் பிரதமராகும் யோகம் இருப்பதாகத்தெரிவித்தார் என்றும் —

பிரதமராகும் யோகமுள்ள மற்றைய இரு அமைச்சர்களும் அமைச்சரவையிலுள்ள இளம் அமைச்சர்கள் என்றும் 'யுக்திய' மேலும் தெரிவிக்கிறது.

அதே சமயம் அடுத்த பிரதமர் யார் என்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களும் கருத்துக்களைப் பரிமாறியுள்ளனர்.

நாடாளுமன்ற உணவு விடுதியில் தமிழ், முஸ்லிம், சிங்கள எம். பிக்கள் சந்தித்தபோது பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன என்று மற்றொரு கொழும்புப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

''பிரேமதாசா தமக்கு எதிராகப் போட்டியிட முடியாத டி.பி. விஜயதுங்காவைப் பிரதமராக்கியது போல ஜனாதிபதி சந்திரிகா அனுருத்த ரத்வத்தையைப் பிரதமராக்குவார்'' என்று ஓர் எம். பி. கூறினார்.

''புலிகள் எதிர்ப்பில் சாதனைகள் புரிந்து பெரும்பான்மையான மக்களின் மதிப்பைப் பெற்றவரான லக்ஷ்மன் கதிர்காமரைத்தான் பிரதமராக்குவார்கள் அவரது மனைவியும் சிங்களம் என்பதால் பிரச்சினை இல்லை'' என்றார் இன்னொரு எம். பி.

''அஸ்ரப்பைத்தான் பிரதமராக்குவார்கள்'' என்றார் அங்கிருந்த தமிழ் எம் பி.

''மகாசங்கத்தினர் அதற்கு இடமளிக்க மாட்டார்கள்'' என்றார் முஸ்லிம் எம். பி. ஒருவர். (இ-150-3)

### புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவி வருவதாகக் கூறப்படும் தகவல்களை அடிப்படையாக வைத்து, அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ் நாடு மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார் தெரிவித்திருந்தார்.

சமீபத்தில் இது குறித்து செய்தியார்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர் கூறியிருந்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தமிழ் நாட்டில் அதிகரித்துள்ளன எனக் கிடைத்துள்ள அறிக்கைகள் தொடர்பாக தமிழ் நாடு அரசு உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கைத் தமிழர்களின் துயரங்களுக்கு அனுதாபம் தெரிவிப்பது வேறு; விடுதலைப் புலியினருக்கு அனுதாபம் தெரிவிப்பது வேறு என்றார். (அ-5)

### பெற்றோர்களின் நிதி உதவியால்

## பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி கட்டடங்கள் சில புனரமைப்பு

சண்டிலிப்பாய், மார்ச் 2

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கடந்த யுத்த கால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த மாடிக் கட்டடமும் வகுப்பறை மண்டபம் ஒன்றும் பெற்றோர்கள் வழங்கிய நிதி உதவியைக் கொண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு அதில் வகுப்புகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

இதே வேளை அங்கு ஏனைய சில வகுப்பறை மண்டபங்களும் மிகவும் கஷ்டப்பட்டு நிர்மாணித்த திறந்த வெளி அரங்கும் கூரைகள், கூரை மரங்கள், கதவுகள், ஜன்னல்கள் என்பன இல்லாத நிலையில் பாழடைந்து கிடக்கின்றன.

பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகத்தினால் கல்லூரி விளையாட்டு மைதானம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரி வளவில் நின்ற சுமார் 30 வருடகால பாரிய வேப்ப மரங்கள் உட்பட பல மரங்கள் திருடர்களினால் வெட்டி விற்கப்பட்டதாகக் கல்லூரி அதிபர் செல்வி வி. கந்தசாமி கவலை தெரிவித்தார். (இ-135)

### அன்பளிப்பு

தமது சொந்த இருப்பிடங்களில் சென்று குடியிருக்க முடியாமல் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள நலனோன்பு நிலையங்களில் தங்கியுள்ள சுமார் இருநூற்றைம்பது குடும்பங்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்துக்குமென அரிக்கேன் லாம்பு, பாய் போன்ற பொருள்கள் பிரதேச செயலரால் வழங்கப்பட்டுள்ளன.

நலனோன்பு நிலையங்களில் வாழும் பாடசாலை செல்லும் மாணவ —மாணவியர்களுக்கான பாடசாலைப் பைகள், அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள், றேசர்கள், அடிமட்டம் போன்ற உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (152)

### உள்ளூராட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயர் கணேசலிங்கம் தலைமையில் போட்டியிடும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக் குழுவை ஆதரிப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கனவே அறிவித்திருந்த போதும், தற்சமயம் ரெலோவை ஆதரிக்க முடிவு செய்துள்ளது,

ரெலோ தனது தேர்தல் பிரசாரத்தை நேற்று ஆரம்பித்தது. (இ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 29[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 2 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org